Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, MARCH 12 2025

புதன்கிழமை 12, மார்ச் 2025 | ஒளி: 10 கதிர் 177 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE



# பெண் வைத்தியர் வன்புணர்வு

அனுராதபுரம் போதனா மருத்துவமனையில் கடமையாற்றும் திருமணம் ஆகாத பெண் வைத்தியர் ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். தனது கடமையை முடித்துக்கொண்டு திங்கட்கிழமை (10) விடுதிக்கு சென்றுக்கொண்டிருந்த போதே, ஆயுதங்களுடன் வந்த நபர், கொலை அச்சுறுத்தல் விடுத்து, பெண் வைத்தியரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் வைத்தியர், தனக்கு நேர்ந்ததை அனுராதபுரம் பொலிஸில் செய்த முறைப்பாட்டை அடுத்து, அனுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## படைவிட்டோடியை பிடிக்க குழுக்கள் நியமனம்



அனுராதபுர போதான வைத்தியசாலையில் கடமையை முடித்துக்கொண்டு விடுதிக்கு திரும்பிக்கொண்டிருந்த பெண் வைத்தியரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய நபரைக் கைது செய்ய ஐந்து பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால

தொடர்ச்சி P2

## அரசாங்கம் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன?



அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் பெண் வைத்தியரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பில், பாராளுமன்றத்தில், செவ்வாய்க்கிழமை (11) கருத்துரைத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, எமது நாட்டின் வைத்தியசாலை

தொடர்ச்சி P2

## அனுராதபுரத்தில் வேலை நிறுத்தம்

பெண் வைத்தியரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அனுராதபுரம் வைத்தியசாலையில் கடமையாற்றுவோர், வேலைநிறுத்த போராட்டத்தில் செவ்வாய்க்கிழமை (11) ஈடுபட்டனர்.

குறிப்பிட்ட பெண் மருத்துவர் திங்கட்கிழமை (10) மாலை வேலை முடிந்து தனது அறைக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது பாலியல் வன்கொடுமைக்கு ஆளானார்.






## அலங்காரங்களை ஆராயக் குழு

பொது போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளின் வடிவமைப்புக்களை (Design) மாற்றுதல் மற்றும் மாற்று உருவமைப்புக்களை (Modification) மேற்கொள்ளுதல் தொடர்பில் ஆராய்வதற்குக் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கமைய மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் முற்கூட்டிய அனுமதியுடன் வாகனங்களின் வடிவமைப்புக்களை (Design) மாற்றுதல் மற்றும் மாற்று உருவமைப்புக்களை (Modification) மேற்கொள்ளலாம்.

தொடர்ச்சி P2

மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு

## நீதியரசர்கள் மூவர் நியமனம்


ஏ.பிரேமசங்கர்

மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மூன்று புதிய நீதியரசர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள், ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (11) பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

அதன்படி, மேல் நீதிமன்ற நீதிபதிகளான டபிள்யூ.கே.எஸ்.யு.பிரேமசந்திர, கே.பிரியந்த பெர்னாண்டோ, ஏ.பிரேமசங்கர் ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு புதிய நீதியரசர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## தமிழரசுக் கட்சியில் இணைந்தார் விந்தன்

நிதர்ஷன் வினோத்



தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோ அமைப்பின் முக்கியஸ்தரும் வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினருமான விந்தன் கனகரட்னம் தமிழரசுக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளார்.

ரெலோ அமைப்பின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவராக இருந்து முன்னாள் மாநகர சபை மாகாண சபை உறுப்பினராக இருந்த விந்தன் கனகரட்னத்துக்கும் கட்சிக்கும் இடையில் அண்மைக்காலமாக முரண்பாடுகள் ஏற்பட்டு வந்திருந்தன.

தொடர்ச்சி P2

## “பட்டலந்த அறிக்கை வருகிறது”




சர்ச்சையை ஏற்படுத்திய பட்டலந்த வதை முகாம் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை இவ்வாரத்துக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாரந்த ஊடகவியலாளர் சந்திப்பு, அரசாங்க தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை (11) இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பட்டலந்த முகாம் மாத்திரமல்ல, கடந்த காலங்களில் இன்னும் பல சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால் தற்போது பட்டலந்த முகாம் குறித்த விடயங்களே வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில், திங்கட்கிழமை(10) இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

## கழிப்பறையில் இலஞ்சம்: சார்ஜன்ட் கைது

ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் பொலிஸ் பிரிவின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவில் பணிபுரியும் சார்ஜன்ட் ஒருவர், இருபதாயிரம் ரூபாய் இலஞ்சம் பெறும் போது, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரிகளால் செவ்வாய்க்கிழமை (11) கைது செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

## “கண்ட இடத்தில் கைது செய்க”



கட்டாய விடுமுறையில் உள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனை கைது செய்வதற்கான திறந்த பிடியாணையை மாத்தறை பிரதான நீதவான் அருண இந்திரஜித் புத்ததாச, செவ்வாய்க்கிழமை (11) பிறப்பித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் துறை இந்த விவகாரம் தொடர்பாக மேலும் அறிக்கையை தாக்கல் செய்து, சந்தேக நபரான ஐ.ஜி.பி-யைக் கைது செய்வதற்கான திறந்த

தொடர்ச்சி P2



## உணவு ஒவ்வாமையால் 52 மாணவர்கள் பாதிப்பு

பேரின்பராஜா சபேஷ்

மட்டக்களப்பு கரடியனாறு பிரதேசத்திலுள்ள பாடசாலையில் சிற்றுண்டிச் சாலையில் செவ்வாய்க்கிழமை (11) விற்கப்பட்ட உணவு ஒவ்வாமை காரணமாக 52 மாணவர்கள் சுகவீனமுற்ற நிலையில் கரடியனாறு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## “தொழில்முனைவோருக்கு ஆதரவை வழங்குவேன்”

### வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்



இலங்கை தொழில்முனைவோர் உலக சந்தையில் தங்கள் பங்கைக் கைப்பற்றுவதற்குத் தேவையான ஆதரவை வழங்க திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

தூதுவர்கள் மற்றும் தொழில்முனைவோரை ஒருங்கிணைக்கும் செயல்முறையின் மூலம் உலக சந்தையில் பிரவேசிப்பதற்கு அரசாங்கம் வலுவான திட்டத்தைக் கொண்டுள்ளது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



## யாழில் கையெழுத்து வேட்டை...

மக்கள் பேரவை இயக்கத்தின் ஏற்பாட்டில் மருந்துகள், அத்தியாவசிய பொருட்கள் மீதான வற் வரியை நீக்கக் கோரியும், பயங்கரவாத தடைச் சட்டத்தை நிறுத்தக் கோரியும் கையெழுத்து பெறும் நடவடிக்கை யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக செவ்வாய்க்கிழமை (11) நடைபெற்றது

இதில் மக்கள் பேரவை இயக்கத்தின் உறுப்பினர்களான–வசந்த முதலிகே, ராஜ்குமார் ரஜீவ்காந், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் மதுசன், பௌத்த தேரர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகத்தினர், மக்கள் பேரவை இயக்கத்தின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

– பு.கஜிந்தன்

ரோயல் பார்க் கொலை வழக்கு

## இழப்பீட்டை செலுத்தினார் மைத்திரி



ரோயல் பார்க் கொலை வழக்கு தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உயர் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை(11) காலை 10 மணிக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

ரோயல் பார்க் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஜூட்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பெண் வைத்தியர் வன்புணர்வு

## அரசாங்கம் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன?

வரலாற்றில் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறான சம்பவமொன்று இடம்பெற்றதை நாங்கள் அண்மைக்காலம் வரை கேள்விப்பட்டதில்லை. அநுராதபுரம் போதனாவை வைத்தியசாலை அதிகளவான மக்கள் நடமாடும் இடம். நாட்டில் இருக்கும் பெரிய வைத்தியசாலை. கடமையில் இருக்கும்போதே குறித்த வைத்தியர் இந்த சம்பவத்துக்கு ஆளாகி இருப்பது பாரிய பிரச்சினையாகும்.

இந்த சம்பவத்தின் மூலம் நாட்டில் வைத்தியசாலை வளாகத்தில் பெண் வைத்தியர்களின் பாதுகாப்பு தொடர்பில் பாரிய பிரச்சினை எழுகின்றது. அநுராதபுரம் வைத்தியசாலையில் இருக்கும் பாதுகாப்பு கூட இல்லாத நூற்றுக்கணக்கான வைத்தியசாலைகள் எமது நாட்டில் இருக்கின்றன. இவ்வாறான சம்பவத்தினால் எமது நாட்டு பெண் வைத்தியர்கள் பெரும் அச்சத்துக்கும் அதிர்ச்சிக்கும் ஆளாகியுள்ளனர். கடந்த காலங்களில் வைத்தியர்களுக்கு எதிராக தூண்டிவிடும் ஆத்திரமூட்டும் நிகழ்வுகள் திட்டமிடப்பட்ட வகையில் இடம்பெற்றன. கோபமூட்டும் சம்பவங்கள் இடம்பெற்றன. இந்த சம்பவத்தை நாங்கள் வன்மையாக கண்டிக்க வேண்டும் என்றார்..

அத்துடன் தேசிய பாதுகாப்பு தொடர்பில் நாங்கள் கதைக்கும்போது அது தொடர்பில் நகைச்சுவை செய்கிறார்கள். கேலிச்சித்திரமும் வரைந்திருந்தார்கள். ஆனால் தற்போது அரச சேவையில் மாத்திரமல்லாது, சேவையில் இருக்கும் பெண் ஊழியர்களுக்கு தங்களின் கடமையைகூட மேற்கொள்ள முடியாத கஷ்டமான நிலைக்கு ஆளாகி இருப்பதன் மூலம் உண்மையிலே மக்களின் பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு தொடர்பில் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது என்றார்..

தொழில்துறைகளில் பணிபுரியும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து சர்வதேச மகளிர் தினத்தில் இந்த சபையிலும் வெளியிலும் நாங்கள் கதைத்து நிகழ்வுகளை மேற்கொண்ட நிலையில், இவ்வாறான சம்பவத்தினால் பெண்கள் நிர்க்கதியானதொரு நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

எனக்கும் ஒரு மகள் இருக்கிறாள். இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் அனைவருக்கும் பாரிய உணர்வு இருக்கிறது. ஆனால் உணர்வுகள் மாத்திரம் இருந்து போதாது. இந்த நாட்டில் வைத்தியர்கள் உள்ளிட்ட பெண்களை பாதுகாத்து அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க நாங்கள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். கடமை நிலையத்தில் இடம்பெற்ற சம்பவம். அதனால் இந்த சம்பவம் தொடர்பில் அரசாங்கம் எடுக்க இருக்கும் நடவடிக்கை என்ன என்பதுடன் வைத்தியசாலைகள் உள்ளிட்ட தொழிற்சாலைகளில் கடமை புரியும் பெண்களின் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன? என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்.

## படைவிட்டோடியை பிடிக்க குழுக்கள் நியமனம்

பாராளுமன்றத்தில், செவ்வாய்க்கிழமை (11) தெரிவித்தார்.

குறித்த சந்தேக நபர், இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், சந்தேக நபரின் இருப்பிடம் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

## அநுராதபுரத்தில் வேலை நிறுத்தம்

சந்தேக நபரைக் கைது செய்யக் கோரி, சிறப்பு மருத்துவர்கள் உட்பட மருத்துவர்கள் வேலைநிறுத்தத்தைத் தொடங்கினர்.

இந்த சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, சிறப்பு மருத்துவர்கள் தனியார் பயிற்சியிலிருந்து விலக முடிவு செய்துள்ளனர்.

மருத்துவமனையில் விழித்திருக்கும் மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு மருத்துவர்கள் வலியுறுத்தினர்.

# “பட்டலந்த அறிக்கை வருகிறது”

அதற்கமைய பட்டலந்த முகாம் குறித்த ஆணைக்குழு அறிக்கையை இவ்வாரத்துக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்தார்.

# அலங்காரங்களை ஆராய குழு

பேருந்துகளை அலங்காரப்படுத்தல் மற்றும் மாற்று உருவமைப்புக்களுக்கான வழிகாட்டிக் கோவையொன்று தயாரிக்கப்பட்டு உள்ளக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

பேருந்துகளின் அலங்காரங்கள் மற்றும் மாற்று உருவமைப்புக்களால் பேருந்துகளில் பயணிக்கின்ற பயணிகளின் பாதுகாப்புக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள் பற்றி ஆராய்ந்து, அதுதொடர்பாக முறைசார்ந்த வகையில் செயலாற்றுவதற்கு விதந்துரைகள் அடங்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக அதிகாரிகள் குழுவொன்றை நியமிக்க அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

# கழிப்பறையில் லஞ்சம்: சார்ஜண்ட் கைது

ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள புதையல் வழக்கு தொடர்பாக பிரதிவாதிகளிடமிருந்து இந்தப் பணத்தைப் பெற சார்ஜென்ட் திட்டமிட்டிருந்தார்.

சந்தேகத்திற்குரிய சார்ஜென்ட் நீதிமன்ற அறை கழிப்பறையில் லஞ்சம் பெற்ற போது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

# தமிழரசுக் கட்சியில் இணைந்தார் விந்தன்

இந்நிலையில், தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சிவஞானம் முன்னிலையில் தமிழரசுக் கட்சியில் இணைந்து உறுப்புரிமையை பெற்றுக் கொண்டுள்ளார். அவருடைய மகனும் இணைந்துகொண்டு உறுப்புரிமையை பெற்றுக்கொண்டார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஆயுதப் போராட்டம் முதல் அரசியல் பயணம் என நீண்ட கால உறுப்பினர் மட்டுமல்லாது அக் கட்சியின் முக்கியஸ்தராகவும் விளங்கி வந்த விந்தன் கனகரட்னம் திடீரென அக் கட்சியிலிருந்து வெளியேறி தமிழரசுக் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார்.

# “கண்ட இடத்தில் கைது செய்க”

பிடியாணையை பிறப்பிக்குமாறு நீதிமன்றத்தைக் கோரியது.

வெலிகம பெலேன பகுதியில் உள்ள சுற்றுலா விடுதிக்கு முன்னால் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த தேசபந்து தென்னகோன், பத்து இடங்களில் மறைந்திருப்பதாக சந்தேகிக்கப்படுவதாகவும், ஆனால் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், கூடுதலாக, மேலும் 18 இடங்களுக்கு புலனாய்வு அதிகாரிகள் அனுப்பப்பட்டு மேலதிக விசாரணைகள் நடத்தப்படும் என்றும் குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

# “தொழில்முனைவோருக்கு ஆதரவை வழங்குவேன்”

கொழும்பில் உள்ள ஷங்ரி-லா ஹோட்டலில் திங்கட்கிழமை (10) நடைபெற்ற இளம் இலங்கை தொழில்முனைவோர் மன்றத்தின் 26வது ஆண்டு விழாவில் பங்கேற்று உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

தடைகளால் பூட்டப்பட்ட பொருளாதாரத்திற்குப் பதிலாக, ஒரு குறிப்பிட்ட அளவிலான சுதந்திர இயக்கத்துடன் கூடிய பொருளாதாரத்தை உருவாக்க இந்த ஆண்டு வரவு -செலவுத் திட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

பொருளாதாரத்தில் சுதந்திரமான இயக்கத்தை உருவாக்குவதன் மூலம் ஒரு குறிப்பிட்ட வேகத்தில் அபிவிருத்தியை எட்ட முடியும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டம், பொருளாதாரத்திற்கு பாரிய அதிர்ச்சியை சந்திக்காத வகையில் தயாரிக்கப்பட்டது என்றும் கூறினார்.

பொருளாதாரம் தொடர்பான முடிவுகளை எடுக்கும்போது, ரூபாயின் பெறுமதிக்கு தாங்க முடியாத அழுத்தத்தை வழங்காது இருப்பதை உறுதி செய்வதில் தற்போதைய அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்துவதாகவும், சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளின்படி சில முடிவுகள் எடுக்க நேரிட்டுள்ளது என்றும் ஜனாதிபதி கூறினார்.

பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ள ஒரு நாட்டின் நம்பிக்கையை மீட்டெடுக்க தற்போதைய அரசாங்கம் சரியான முடிவுகளை எடுத்துள்ளதாகவும், அதன் விளைவாக, வங்குரோத்தான அரசை வங்குரோத்து நிலையிலிருந்து உத்தியோகபூர்வமாக மீட்க முடிந்துள்ளதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மக்களின் ஒவ்வொரு ரூபாயும் கடவுளின் பணியாகக் கருதி பயன்படுத்தப்படுவதை தனது அரசாங்கம் உறுதி செய்வதாகவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் திட்டத்தின் காரணமாக, ஜப்பானிய அரசாங்கத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பொருளாதார ரீதியாக முக்கியமான 11 திட்டங்களின் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் சீன அரசாங்கத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 76 திட்டங்களின் பணிகள் மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

# உணவு ஒவ்வாமையால் 52 மாணவர்கள் பாதிப்பு

மாணவர்களில் சிலர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவர்கள் பாடசாலை இடைவேளை நேரத்தில் பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள சிற்றுண்டிச் சாலையில் நூடுல்ஸ் வாங்கி உண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கரடியனாறு மகா வித்தியாலயத்தில் தரம் ஆறு முதல் உயர்தரம் வரையிலான 21 ஆண்களும் 31 பெண்களுமாக 52 பேர் உணவு ஒவ்வாமை காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்களில் மூவர் மயக்கமுற்ற நிலையிலும் ஏனையவர்களுக்கு வாந்தி மற்றும் வயிற்றோட்டம் ஏற்பட்டதன் காரணமாக பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அயலவர்களின் உதவியுடன் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

> **“ பாடசாலை மற்றும் வைத்தியசாலை வளாகத்தில் பெற்றோர் மற்றும் பிரதேசவாசிகள் பிரவேசத்தினால் பதற்றமான சூழல் ஏற்பட்டிருந்தது**

இது தொடர்பாக சுகாதாரத்துறை அதிகாரிகள் பாடசாலைக்குச் சென்று உணவு மாதிரிகளை பரிசோதித்து வருகின்றனர்.

கரடியனாறு பொலிஸார் பாடசாலைக்குச் சென்று சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கரடியனாறு பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பாடசாலை மற்றும் வைத்தியசாலை வளாகத்தில் பெற்றோர் மற்றும் பிரதேசவாசிகள் பிரவேசத்தினால் பதற்றமான சூழல் ஏற்பட்டிருந்தது.

# இழப்பீட்டை செலுத்தினார் மைத்திரி

ஷ்ரமந்த ஜெயமஹாவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி பொது மன்னிப்பு ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஒரு மில்லியன் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என்ற நீதிமன்றத்தின் உத்தரவை நிறைவேற்றத் தவறியதற்காக, இந்த நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அவருக்கு தண்டனை வழங்காமல் இருப்பதற்கான காரணத்தை ஏப்ரல் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டபோது, அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஒரு மாதத்திற்குள் ஒரு மில்லியன் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த மனு செவ்வாய்க்கிழமை (11) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்தன, மைத்திரிபால சிறிசேன இன்றுவரை அந்தத் தொகையை செலுத்தவில்லை என்று தெரிவித்தார்.

அதன்படி, மைத்திரிபால சிறிசேனவுக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி, இந்த இழப்பீட்டை செலுத்தத் தவறியதற்காக தண்டிக்கப்படாமல் இருப்பதற்கான காரணத்தை முன்வைக்குமாறு கோரி நோட்டீஸ் அனுப்பப்பட்டது. எனினும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பைசல் முஸ்தபா, தனது கட்சிக்காரர், பணத்தை செலுத்திவிட்டார் என்று நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

இந்த உண்மைகளை முறையாக ஒரு மனுவை தாக்கல் செய்வதன் மூலம் முன்வைக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சட்டத்தரணிக்கு, உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

# சமய நூல்கள் இறக்குமதி; ஞானசார தேரர் அதிருப்தி


நாட்டிற்குள் மத புத்தகங்களை இறக்குமதி செய்வதற்கான தடையை நீக்குவதற்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்படும் அளவுகோல்கள் குறித்து பொதுபல சேனா அரசாங்கத்திடம் செவ்வாய்க்கிழமை (11) கேள்வி எழுப்பியது.

ஊடகங்களுக்கு கருத்துரைத்த, பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்,

பாதுகாப்பு அமைச்சின் ஒப்புதலைத் தொடர்ந்து புத்தசாசன, மத மற்றும் கலாச்சார விவகார பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க மேற்கண்ட முடிவை எடுத்ததாக கூறியுள்ளார் என்றார்.

முன்னதாக, ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பு தாக்குதலுக்குப் பிறகு நாட்டிற்கு மதப் புத்தகங்களை இறக்குமதி செய்வது தடைசெய்யப்பட்டதாக அவர் கூறினார்.

”ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுக்கு முன்னும் பின்னும் கூட பல சந்தர்ப்பங்களில், முந்தைய அரசாங்கங்களுக்கு இதை நாங்கள் திட்டவட்டமாகக் குறிப்பிட்டோம்,” என்று அவர் கூறினார்.”இஸ்லாத்தின் தவறான விளக்கத்தின் மூலம் நாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட உலகளாவிய பயங்கரவாத அச்சுறுத்தல் இன்னும் குறையாத சூழலில் இதுபோன்ற முடிவை எடுப்பது மிகவும் ஆபத்தானது.



இரண்டு சந்தர்ப்பங்களில், இலங்கையில் பணத்திற்காக மக்களைக் கொல்வதற்காக ஏராளமான கொலைகார கும்பல்கள் செயல்படுகின்றன என்று நான் உறுதியாகக் கூறியுள்ளேன்,” என்று தேரர் கூறினார்.

மேலும், 1 முதல் 13 ஆம் வகுப்பு வரையிலான இந்தப் பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு USAID நிதி அளித்ததாகவும், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் அச்சிடப்பட்டதாகவும் அவர் கூறினார்.

“இந்தப் பாடப்புத்தகங்கள், மனதை மாற்றும் திறன் உள்ள நூலான குர்ஆனை தவறாக புரிந்து கொண்டு, உலகம் முழுவதும் மதப் பயங்கரவாதத்தைக் கட்டியெழுப்ப சித்தாந்தங்களை வழங்கிய, தற்போதைய இஸ்லாமியத் தலைவர்களின் கருத்துக்களை கொண்டுள்ளன. அவை ஒரு குழந்தைக்கு கற்பிக்கக் கூடாதவை “ என்று தேரர் கூறினார்.

”பாடப்புத்தகப் பிரச்சினையைத் தீர்க்காமல், அரசாங்கம் நாட்டிற்குள் மதப் புத்தகங்களை இறக்குமதி செய்ய அனுமதித்துள்ளது. இந்தப் பாட புத்தகம் இலங்கையில் உள்ள அப்பாவி மற்றும் பாரம்பரிய முஸ்லிம் சமூகத்தின் மனதை மாற்ற வழிவகுக்கும், மேலும் அவர்களை சஹ்ரான் ஹாஷிம் போன்றவர்களாக மாற்றும்” என்று தேரர் கூறினார்.ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுக்கு பின்னணியில் இருந்த சூத்திரதாரி பற்றிய விவரங்களைப் பெற அரசாங்கத் தரப்பில் இருந்து யாரும் தம்மைத் தொடர்பு கொள்ளவில்லை என்றும் ஞானசார தேரர் கூறினார்.

“மக்கள் சேவைக்கு ஏற்றவாறு

# மாற்றி வருகிறோம்”

இந்த நாட்டின் அனைத்து முறைமைகளும் ஆட்சியாளர்களின் பாதுகாப்பிற்காக அவர்களின் தேவைக்கு ஏற்றவாறு மாற்றப்பட்டு இருந்ததாகவும், தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு சேவை செய்வதற்கு ஏற்றவாறு அந்த அனைத்து முறைமைகளையும் படிப்படியாக மாற்றி வருவதாகவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அம்பாறை பிரதேசத்தில் நடைபெற்ற பெண்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஐந்து மாதங்களில் அரசாங்க அதிகாரிகளிடமோ அல்லது பொலிஸாரிடமோ இதை செய்ய வேண்டாம், இதைச் செய்யுங்கள் என்று அழுத்தம் கொடுத்து எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்ததா, என்று



கேட்டுப்பாருங்கள். அப்படி நடக்கவில்லை. அந்த கலாசாரத்தை மாற்றியுள்ளோம். இப்போது சட்டம் நாட்டில் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. எமது நாட்டில் சட்டம் இருக்கிறது என்று மக்கள் உணர ஆரம்பித்துவிட்டனர். இதன் மூலம், நாட்டின் அனைத்து சேவைகளும் படிப்படியாக சரியான திசைக்கு கொண்டுவரப்படுகின்றன என்றார்..

இந்த நாட்டில் இருந்த அனைத்து முறைமைகளும் ஆட்சியாளர்களைப் பாதுகாக்கவும், ஆட்சியாளர்கள் விரும்பியபடி செயல்படுவதற்காகவும் மாற்றப்பட்டன. இன்று நாம் இந்த முறைமையை படிப்படியாக மாற்றி மக்களின் பாதுகாப்புக்கும் சேவைக்கும் ஏற்றதாக மாற்றி வருகிறோம்.

இதை 24 மணி நேரத்தில் நூறு வீதம் செய்துவிட முடியாது. காலம் தேவை. இந்நாட்டு மக்கள் பல ஆண்டுகளாகப் பழக்கப்பட்ட ஒரு முறைமை உள்ளது. இது மாற வேண்டும். மக்கள் ஒரே இரவில் மாற மாட்டார்கள். ஆனால் அந்த மாற்றத்திற்கு தேவையான தலைமைத்துவத்தையும் வழிகாட்டுதலையும் முன்னுதாரணத்தையும் வழங்கி வருகிறோம். எனவே, இந்த நாட்டை சரியான திசைக்கு கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது என்றார்.

## கந்தபளை விபத்தில் மூவர் காயம்

ரஞ்சித் ராஜபக்ஷ

கந்தபளை இலிருந்து நுவரெலியா நகரத்திற்குச் சென்ற கார் ஒன்று, வீதியை விட்டு விலகி, தேயிலைத் தோட்டத்தில் சுமார் 15 அடி பள்ளத்தாக்கில் விழுந்ததில், காரில் பயணித்த ஒரு முன்பள்ளி மாணவி, அவரது தாயார் மற்றும் ஓட்டுநர் ஆகியோர் காயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து, நுவரெலியா-கந்தபளை பிரதான வீதியில் உள்ள பொரலந்த பகுதியில் திங்கட்கிழமை (10) பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்து குறித்து விசாரணை நடத்தி வரும் நுவரெலியா காவல்துறை போக்குவரத்துப் பிரிவின் அதிகாரிகள்,



கடந்த 10 ஆம் திகதி பெய்த கனமழை காரணமாக கந்தபொல மற்றும் பொரலந்த பகுதிகளில் சென்று கொண்டிருந்த மோட்டார் வாகனம் சறுக்கி பள்ளத்தாக்கில் விழுந்ததில் இந்த விபத்து ஏற்பட்டதாக தெரிவித்தனர்.

## இரண்டு விபத்துக்களில் நால்வர் பலி: ஒருவர் காயம்

பகமுன, எலஹெரவில் காரொன்று செவ்வாய்க்கிழமை (11) அதிகாலை கால்வாயில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில், ஆணும் பெண்ணும் மரணமடைந்தனர். மற்றொரு இளம் பெண் படுகாயமடைந்து தம்புள்ளை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்க ப்பட்டுள்ளதாகவும் பகமுன பொலிஸார் தெரிவித்தனர்.

பிரபல சுற்றுச்சூழல் ஆர்வலர் திலக் கண்டேகமவின் மனைவி ஓய்வுபெற்ற அதிபர் லட்சுமி சிறிவர்தன (72) மற்றும் அவரது இயற்கைப் பண்ணையில் படித்துக்கொண்டிருந்த தனுஷ்க என்ற மாணவன் ஆகியோர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்த பெண், பொறியியலாளர் கந்தேகமவின் மகள் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

நௌலவிலிருந்து எலஹெரா நோக்கி கார் சென்று கொண்டிருந்தபோது, முன்னோக்கி ஒரு வளைவில் ஓட்டுநரால் காரைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதாகவும், கார் போக்குவரத்து சிக்னல் தூணில் மோதி கால்வாயில் கவிழ்ந்துவிட்டதாகவும் தெரியவந்துள்ளது.



“இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு வீடு திரும்பும் போது இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது

இந்நிலையில், நாவுல-பகமுங்கன சாலையில் மொரகஹகந்தவில் ஒரு சிறிய லொறி மற்றொரு லொறியின் பின்புறத்தில் மோதியதில் ஒரு பெண் உட்பட இரண்டு பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் உயிரிழந்தவர் ஹிங்குராக்கொட பகுதியைச் சேர்ந்த ஜே. ஏ. நிஷாந்த உதய குமார (47) மற்றும் ஆர். எம். சஞ்சீவனி தில்ருக்ஷி (41) ஆகியோர் உயிரிந்துள்ளனர். இவ்விருவரும் தம்பதிகள் என்றும் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொங்கஹவெல பகுதியில் நடந்த இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு வீடு திரும்பும் போது இந்த விபத்தை அவர்கள் சந்தித்ததாக விசாரணையில் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## பிளாஸ்டிக் பாவனைக்கு எதிராக விழிப்பூட்டல்

எம்.எஸ்.எம்.நூர்தீன்

தடை செய்யப்பட்ட பொலித்தீன் பிளாஸ்டிக் பாவனைக்கு எதிராக விழிப்பூட்டும் வேலைத் திட்டம் காத்தான்குடியில் மத்திய சுற்றாடல் அதிகார சபை அதிகாரிகளால் செவ்வாய்க்கிழமை (11) மேற் கொள்ளப்பட்டது.

கிளீன் சிறிலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.உதயராஜன் தலைமையில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அதிகாரிகள் பொலிஸாருடன் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்தனர்.

40 பேர் கொண்ட அதிகாரிகள் மூன்று குழுக்களாகப் பிரிந்து ஹோட்டல்கள், பல சரக்கு கடைகள், பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களுக்குச் சென்று அங்குச்



சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் விழிப்புணர்வை மேற் கொண்டு தடை செய்யப்பட்ட பொலித்தீன் பிளாஸ்டிக் பாவனைக்கு எதிராக விழிப்பூட்டும் துண்டுப் பிரசுரத்தையும் விநியோகம் செய்தனர்.

இதன்போது, 45 வர்த்தக நிலையங்களுக்கு அதிகாரிகள் சென்று சோதனை செய்ததுடன் விழிப்புணர்வையும் மேற் கொண்டதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.உதயராஜன் தெரிவித்தார்.

## மாணவனை சரமாரியாக தாக்கும் ஆசிரியருக்கு எதிராக விசாரணை

தனியார் வகுப்பு ஆசிரியர் ஒருவர் மாணவர் ஒருவரை பல பிரம்புகளால் தாக்யகிய வீடியோ தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

நுகேகொடை, கம்பஹா போன்ற இடங்களில் பொருளாதாரம் மற்றும் வணிகவியல் பாடங்களைக் கற்பிக்கும் இந்த தனியார் வகுப்பு ஆசிரியர் தனது வகுப்புகளில் உள்ள மாணவர்களைச் சரமாரியாகத் தாக்கும் வீடியோ சமூக வலைத்தளங்களில் தற்போது பரவி வருகிறது.

ஒரு வீடியோவில், மாணவியின் கைத்தொலைபேசியை எடுத்த மாணவனை, மாணவியின் கைகளில் பல பிரம்புகளைக் கொடுத்து அடிக்க வைத்துள்ளார்.

பின்னர் அந்த பிரம்புகளால் மாணவனை ஆசிரியரும் கடுமையாகத் தாக்கியுள்ளார்.

இதையடுத்து குறித்த ஆசிரியையின் தாக்குதலுக்கு உள்ளானவர்கள் யார் என்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, 18 வயதுக்கு உட்பட்டவர்களே குழந்தைகளாகக் கருதப்படுவதாகவும், உயர்தர வகுப்புகளில் படிக்கும் சில மாணவர்கள் 19 வயதைப் பூர்த்தி செய்துள்ளதால், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அதிகார சபையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். R

## நல்லத்தண்ணி மாணவி மரணம்

செ.தி.பெருமாள்

நல்லத்தண்ணி பொலிஸ் பிரிவில் உள்ள மறே தோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவர் அதிக அளவில் மாத்திரைகளை விழுங்கி, திங்கட்கிழமை (10) மரணமடைந்துள்ளார்.

மகளின் வாயில் இருந்து நுரை வருவதைக் கண்ட பெற்றோர், முச்சக்கர வண்டி மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலைக்கு மகளைக் கொண்டு சென்றனர் எனினும், இடைவழியில் மரணமடைந்துவிட்டார்.

மாணவியின் உடலம் டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் உடற் கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப் பட்ட போது, அந்த மாணவியின் உடல் பாகங்கள் மேலதிக பரிசோதனை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என நல்லத்தண்ணி பொலிஸ் நிலைய அதிகாரி பி.தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

## யாழ். யூடியூபர் உட்பட நால்வருக்கு விளக்கமறியலில்

யாழ்ப்பாணத்தில் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றின் வீட்டினுள் இரவு வேளையில் நுழைத்து, அநாகரிகமாக நடந்து கொண்ட யூடியூபர் உள்ளிட்ட நால்வரையும் எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் வறியவர்களுக்கு உதவி செய்வதாகப் புலம்பெயர் தமிழர்களிடம் நிதியினை பெற்று, அதன் ஊடாக உதவி செய்வது போன்ற காணொளிகளைத் தனது யூடியூப் தளத்தில் பதிவேற்றி வந்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தந்தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் பாடசாலை மாணவியொருவரின் வீட்டுக்கு இரவு வேளை சென்ற குறித்த நபர், பாடசாலை மாணவியைக் காணொளி எடுக்க முற்பட்டுள்ளார்.

அதற்கு மாணவி மறுப்பு தெரிவிக்கவே, காணொளியில் நாகரிகமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

## பொலிஸ் அதிகாரியின் மகனை கைது செய்ய உத்தரவு

நிதர்ஷன் வினோத்

குற்றச்செயல்களில் ஈடுபட்ட நபர்களைச் சட்டத்தின் பிடியிலிருந்து காப்பாற்றி விடுவதாகக் கூறி பணம் பெற்று வந்த பொலிஸ் உயர் அதிகாரியின் மகனைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு, யாழ். நீதவான் நீதிமன்றம் பொலிஸாருக்கு கட்டளையிட்டுள்ளது.

யாழ். பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியவரின் மகன், பொலிஸ் நிலையங்களுடன் வழக்குகளை முடிப்பதாகக் கூறி பணம் பெற்று வந்தமை தொடர்பில் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வந்த நிலையில், மகன் தலைமறைவாகி உள்ளார்.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் யாழ். நீதவான் நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்த நிலையில், சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

இதேவேளை, சந்தேக நபரின் தந்தையான பொலிஸ் அதிகாரி முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்கு இட மாற்றப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.










## யாழில் மாபெரும் கவனயீர்ப்பு பேரணி

பு.கஜிந்தன்

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, யாழ்ப்பாணத்தில் மாபெரும் கவனஈர்ப்பு பேரணி செவ்வாய்க்கிழமை (11) அன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த பேரணி, பேண்ட் இசையுடன் நல்லூர் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பித்து கிட்டுப்பூங்கா வரை சென்றது.

பின்னர் கிட்டு பூங்காவில் பொதுச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டு மகளிர் தினம் ஆரம்பமானது. இதன்போது மகளிர்களின் உரைகள் இடம்பெற்றன.

“பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குக”, “பாலியல் குற்றங்களைத் துரிதமாக விசாரிக்க நடமாடும் நீதிமன்றங்கள் உருவாக்குக”, “பெண் மனித உரிமை செயற்பாட்டாளர்களை அரச புலனாய்வாளர்கள் பின் தொடர்வது, தொலைபேசியில் அழைப்பது, புகைப்படம் எடுப்பது, விசாரணை செய்வதை உடன் நிறுத்துக” என்ற வாசகங்கள் எழுதிய பதாகையை தாங்கிய வாகனமும் பேரணியில் பவனி வந்தது.

வடக்கு, கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பினால் இந்த பேரணியானது முன்னெடுக்கப்பட்டது. இதில் யாழ்ப்பாணம், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆயிரக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டனர்.











# சமூக ஊடகங்களை கண்காணிக்க கடுமையான சட்டம் அவசியம்

சமூக ஊடகங்கள் இன்று உலகில் மிகவும் பிரபலமான தகவல் தொடர்பு ஊடகங்களில் ஒன்றாக மாறிவிட்டது என்பது இரகசியமல்ல. தொழில்நுட்ப முன்னேற்றங்களால், சமூகத்தில் பலர், வயது வித்தியாசமின்றி, சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர். சமூக ஊடகங்களின் பயன்பாடு அதிகரித்து வருவதால், இன்று சமூகத்தில் பல பிரச்சனைக்குரிய சூழ்நிலைகள் உருவாகியுள்ளன. குறிப்பாக கட்டுப்பாடற்ற பயன்பாடு காரணமாக, பாதகமான விளைவுகள் மற்றும் பாதகமான நிலைமைகள் அதிகரிக்கும் போக்கு உள்ளது.

உலகின் பிற நாடுகளைப் போலவே, இலங்கையிலும் ஏராளமான மக்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர். எனவே, சமூக ஊடகங்களை முறையற்றதாகவும் கட்டுப்பாடு இல்லாமல் பயன்படுத்துபவர்கள் சமூகத்தில் பாதகமான சூழ்நிலைகளை உருவாக்கக்கூடும்.

சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் இதுபோன்ற பாதகமான சூழ்நிலைகள் ஏற்படுவதற்கான காரணம், சில சமூக ஊடக பயனர்கள் தங்கள் தகவல்களையும் கருத்துகளையும் அவை உண்மையா பொய்யா, அவை நன்மை பயக்கும் அல்லது தீங்கு விளைவிக்கும், அவை ஒழுக்கமா அல்லது ஆபாசமா என்பதைப் பரிசீலிக்காமல் வெளியிடுகிறார்கள். அதன்படி, சமூகத்திற்கு பயனளிக்காத வகையில் தகவல்களை வெளியிடுவது சமூகத்தில் பாதகமான சூழ்நிலைகளை உருவாக்கும் அதிக போக்கைக் கொண்டுள்ளது.

இருப்பினும், பாரம்பரிய ஊடகங்களில் கவனம் செலுத்தும்போது, அந்தத் துறையைப் பற்றிய அறிவைக் கொண்ட ஒருவரின் ஒப்புதலுடன் பாரம்பரிய ஊடகங்கள் மூலம் தகவல்கள் வெளியிடப்படுகின்றன. மற்றும் புரிதலுடன். ஆனால் சமூக ஊடகங்களில் வெளியிடப்படுவது அதைப் பயன்படுத்தும் நபரைப் பற்றியது.

இதுபோன்ற காரணங்களால், சமூகத்தில் பாதகமான சூழ்நிலைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். சில சந்தர்ப்பங்களில், சமூக ஊடகங்கள் சமூகத்தில் தகாத முறையில் பயன்படுத்தப்படும் சில சிக்கலான சூழ்நிலைகளில் சட்டம் அமல்படுத்தப்படுவதாகவும் தகவல்கள் உள்ளன.

சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதகமான சூழ்நிலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதற்குக் காரணம், சமூக ஊடகங்களைச் சரியாகப் பயன்படுத்துவது மற்றும் அதற்குப் பொருந்தும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பற்றிய புரிதல் இல்லாததே ஆகும்.

இப்போதெல்லாம், மனிதர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதை முற்றிலுமாக கைவிடுவது சாத்தியமில்லை. அதன்படி, சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் எதிர்மறையான பக்கங்களுக்கு மேலதிகமாக, ஒரு நேர்மறையான பக்கமும் உள்ளது, எனவே சமூக ஊடகங்களைப் புரிதலுடனும், சமூகத்திற்கு நன்மை பயக்கும் வகையிலும், அதற்குப் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் சட்ட அம்சங்களைப் பற்றிய விழிப்புணர்வு மற்றும் புரிதலுடனும் பயன்படுத்துவது மிக முக்கியம்.

இங்கு மிக முக்கியமானது என்னவென்றால், சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதையோ அல்லது வேறுவிதமாக சட்டங்களை அமல்படுத்துவதையோ விட, அவற்றைப் பயன்படுத்தும் போது ஒவ்வொரு தனிநபருக்குள் சுய ஒழுங்குமுறையை ஏற்படுத்துவதாகும் என்பதே எமது அவதானிப்பாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# ஊழல் எதிர்ப்பு ஊடகங்களில் மட்டுமா?



எம்.எஸ்.எம்.ஐயூப்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை போன்ற அரச நிறுவனங்களில் இடம்பெற்றுள்ள பல ஊழல்கள் கடந்த சில வாரங்களாக அரச பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்ற குழுவின் (COPE) கூட்டங்களின் போது அம்பலமாகி வருகிறது.

அந்த நிறுவனங்களில் இடம்பெற்றுள்ள சில கொடுக்கல் வாங்கல்களை பார்க்கும் போது, அவற்றின் அதிகாரிகள் எந்த அளவு அச்சமின்றி சட்டத்தை மதிக்காது எதேச்சாதிகாரமாக பொதுப் பணத்தை வீண் விரயம் செய்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது.

காலியில் நடைபெற்ற தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிகழ்ச்சி ஒன்றின் போது பந்தல்களை போடுவதற்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் செலவழித்துள்ள அதிகாரிகள் அதே நிகழ்ச்சியை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்காக பந்தல் ஒன்றுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் செலவழித்துள்ளார்கள். அவர்கள் எந்தளவு எதேச்சாதிகாரமாக நடந்து கொண்டுள்ளார்கள் என்றால் ஊழல்களை மூடி மறைக்கவாவது அவர்களுக்கு தேவை இருந்ததாக தெரியவில்லை. எனவே, கொள்வனவு செய்யப்பட்ட ரீ-சேர்ட்டுகளுக்காக இரும்புக் கடை ஒன்றில் தான் பற்றுச்சீட்டு பெற்றிருக்கிறார்கள்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் தினத்துக்கு முதல் நாள் 188 மில்லியன் ரூபாய் பெறுமதியான காசோலைகளை வெளியிட்டுள்ளதாகவும் அப்பணம் ரணில் விக்ரமசிங்கவின் தேர்தல் செலவுக்காகவே பயன்படுத்தபட்டுள்ளதாகவும் ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு இருந்தன.

சட்ட விரோத நடவடிக்கை ஒன்றின் காரணமாக தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையால் கைப்பற்றப்பட்ட 250 மில்லியன் ரூபாய் பெறுமதியான இரத்தினக்கல் பொதியொன்று அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அனுமதியின்றி கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்னர் சந்தேக நபரிடமே வழங்கப்பட்டுள்ளதாகவும் கோப் கூட்டமொன்றில் தெரிய வந்தது.

இந்த கொடுக்கல் வாங்கல்கள் எவ்வாறு இடம்பெற்றன என்று அந்நிறுவனங்களின் அதிகாரிகளிடம் வினவிய போது அவற்றை செய்யுமாறு தாம் வற்புறுத்தப்பட்டதாகவும் மிரட்டப்பட்டதாகவும் அவர்கள் பதிலளித்தனர். இதற்கு முன்னர் கோப் குழுவின் கூட்டங்களில் அதிகாரிகள் இந்தளவு வெளிப்படையாக இது போன்ற அச்சுறுத்தல்களை தெரிவிக்கவில்லை.

ஒன்றில் அவர்கள் தற்போதைய அரசாங்கத்தைப் பற்றி முன்னர் இல்லாத ஒரு பயத்தில் செயற்படுகிறார்கள். அல்லது அவற்றை வெளியிடுவதன் மூலம் தாம் பாதிக்கப்பட மாட்டோம் என்ற உத்தரவாதத்துடன் அவர்கள் தற்போது செயற்படுகிறார்கள்.

ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்குப் பின்னரும் புதிதாக கோப் குழு நியமிக்கப்படுகிறது. கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பின்னர் அக் குழு நியமிக்கப்படும் போது, எதிர்க் கட்சிகளுக்கு அதன் தலைமை பதவியை வழங்குவதே மரபாகும் என்று அக்கட்சிகள் அரசாங்கத்தின் தலைவர்களிடம் சுட்டிக் காட்டின.

ஆனால், ஏனைய பாராளுமன்ற கண்காணிப்புக் குழுக்களின் தலைமை பதவியை எதிர்க் கட்சிகளுக்கு வழங்கினாலும் கோப் குழுவின் தலைமை பதவியை வழங்க முடியாது என்று அரசாங்கம் கூறிவிட்டது. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்துக்கு வந்த ஒரு சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் இக் கோரிக்கையை விடுத்தார். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்ற பல முறைகேடுகளை விசாரிக்க வேண்டியிருப்பதால் அக்கோரிக்கையை நிறைவேற்ற முடியாது என்று ஜனாதிபதி அப்போது கூறினார்.

அது போலவே, கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்ற பல மோசடிகள் இப்போது கோப் குழுவில் அம்பலப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆயினும் இவற்றை அம்பலப்படுத்துவதால் நாட்டுக்கு என்ன பயன் கிடைக்கிறது என்ற கேள்வியும் எழுகிறது. இதற்கு முன்னரும் கோப் குழு முன் அரசாங்க அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு குழுவின் தலைவரும் கணக்காய்வாளர் நாயகமும் குழு உறுப்பினர்களும் அவர்களை கடுமையாக விசாரிப்பதை தொலைக் காட்சியில் பார்த்திருக்கிறோம். ஆனால் பெற்ற பயன் எதுவும் இல்லை.

நாட்டின் சகல பொருளாதார பிரச்சினைகளுக்கும் அரசியல்வாதிகளாலும் அதிகாரிகளாலும் மேற்கொள்ளப்படும் ஊழல்களே பிரதான காரணம் என்பது கடந்த தேர்தல்களுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களின் வாதமாகியது. அதாவது ஊழல்களை நிறுத்தினால் நாட்டில் பிரச்சினைகளில் பெரும் பகுதி தீர்ந்துவிடும் என்ற கருத்தை அவர்கள் தெரிவித்து வந்தனர். அது முற்றிலும் உண்மையல்லாவிட்டாலும் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு ஊழல்கள் பிரதான காரணமொன்று என்பதை மறுக்க முடியாது.

> **ரீ-சேர்ட்டுகளுக்காக இரும்புக் கடை ஒன்றில் தான் பற்றுச்சீட்டு பெற்றிருக்கிறார்கள். அந்த அளவுக்கு ஊழல், மோசடி மலிந்துவிட்டது**

கடந்த 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி மிக மோசமான நிலையில் நாட்டை பாதித்த போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்வொன்றை தேடி சர்வதேச நாணய நிதியத்தை அணுகினார். இது தொடர்பாக இந்தியாவின் என்.டி.ரி.வி. தொலைக்காட்சிக்கு கருத்து தெரிவித்த சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜார்ஜீவா இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு நிர்வாக முறைகேடுகளே காரணம் என்று கூறியிருந்தார்.

ஐ.நா. மனித உரிமை பேரவையும் அவ்வாண்டு இலங்கையின் பொருளாதார நெருக்கடியைப் பற்றி ஆராய்ந்திருந்தது. அப்போது மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர் ஸ்தானிகர் இலங்கையில் இடம்பெற்ற பொருளாதார முறைகேடுகளை பொருளாதார குற்றச் செயல்கள் (economic crimes) என்று வர்ணித்தார்.

2022 ஆம் ஆண்டு முதல் நாணய நிதியத்தின் அதிகாரிகள் இலங்கை அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது ஊழலை தடுப்பதை வலியுறுத்தி வந்துள்ளனர். இலங்கைக்கு உதவி வழங்குவதற்கு ஊழல் தடுப்பை ஒரு நிபந்தனையாகவும் அந்நிதியம் விதித்தது. அதன் படி ஊழல் தடுப்புச் சட்டம் ஒன்றும் 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நிறைவேற்றப்பட்டது.

அரச நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல்கள், முறைகேடுகள் மற்றும் வீண் விரயம் ஆகியவற்றை கண்டறிவதில் கோப் விசாரணைகள் பெரும் பங்கை ஆற்றி வருகின்றன. ஆனால் அரசியல்வாதிகள் ஊழல் விடயத்தில் உறுதியாகவும் நேர்மையாகவும் செயற்படாவிட்டால் அதன் மூலம் பயன் பெற முடியாது. கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலான கால கட்டத்தில் கோப் குழு பாரிய அளவிலான ஊழல்களை அம்பலப்படுத்தியுள்ள போதிலும் குற்றவாளிகளுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2007 ஆம் ஆண்டு கோப் குழுவின் தலைவராக இருந்த விஜயதாச ராஜபக்ஷ அறிக்கையொன்றை வெளியிட்டார். 26 அரச நிறுவனங்களில் 160 பில்லியன் (16,000 கோடி) ரூபாய்க்கு மேல் மோசடி செய்யப்பட்டுள்ளதாக அதில் அவர் குறிப்பிட்டு இருந்தார். அதே காலத்தில் பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவின் (Committee on Public Accounts- COPA) தலைவராக இருந்த ரவூப் ஹக்கீம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இதே போன்றதொரு தொகை பொதுப் பணம் கொள்ளையடிக்கப்பட்டு இருந்தது.

பின்னர் 2017ஆம் ஆண்டு கோப் குழுவின் தலைவராக இருந்த மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தியும் அறிக்கையொன்றை வெளியிட்டார். 15 நிறுவனங்களில் 110 பில்லியன் (11,000 கோடி) ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது. 2023 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கொள்றின் படி தேசிய வீடமைப்பு அதிகார சபையில் மட்டும் 10 பில்லியன் (1000 கோடி) ரூபாய் முறைகேடாக பயன்படுத்தப்பட்டு இருந்தது.

எனினும் இவ்வாறான அறிக்கைகள் வெளியிடப்பட்டால் அவை ஓரிரு நாட்கள் மட்டுமே பேசுபொருளாகின்றன. அதன் பின்னர் அவை மறக்கப்படுகின்றன. ஊழல் பேர்வழிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. அதன் காரணமாக எவ்வளவு பாரிய ஊழல்கள் அம்பலப்படுத்தபட்டாலும் எவரும் அதனை பெரிதான பொருட்படுத்துவதில்லை.

இந்த விடயம் கோப் குழுவிலும் பாராளுமன்றத்திலும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு ஒக்டோபர் 25ஆம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பொறிமுறை ஒன்று இல்லாவிட்டால் கோப் மற்றும் அரச நிதிக் குழு ஆகியவற்றில் ஊழல்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதில் அர்த்தம் என்ன என்று கேட்டார்.

2022ஆம் ஆண்டு பேராசிரியர் சரித்த ஹேரத்தே, கோப் குழுவின் தலைவராக இருந்தார். அப்போது அவரும் அம்பலப்படுத்தப்படும் ஊழல்கள் விடயத்தில் மேல் நடவடிக்கை எடுப்பதை வலியுறுத்தினார். மேல் நடவடிக்கைகளை எடுப்பதற்காக கோப், கோபா மற்றும் அரச நிதிக்குழு ஆகியவற்றில் விசாரணைகள் நடைபெறும் போது சட்ட மா அதிபரின் பிரதிநிதி ஒருவரும் அதில் பங்கேற்க வேண்டும் என்றும் அதற்காக பாராளுமன்றத்தின் நிலையியல் கட்டளைகளை திருத்துமாறு 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் அப்போது அரச நிதிக் குழுவின் தலைவராக இருந்த கலாநிதி ஹர்ஷ டி சில்வா சபாநாயகரை கேட்டுக்கொண்டார்.

பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பல முறை இந்தக் கோரிக்கையை விடுத்த போதிலும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஊழலைப் பற்றி கூறியே பதவிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அதை செய்யுமா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்


பிரதி உபகாரங்களை எதிர்பாராதவர்கள், ஈ ஆசைகள் அற்றவர்கள்; பிறருக்கு உதவுவதில் பரந்த மனம் உள்ளவர்களாக இருப்பார்கள். தாங்கள் கொடுத்ததை விளம்பரம் செய்யாதவர்கள். உண்மையான கொடையாளிகள்.

ஏழைகளுக்கு வலிந்து உதவிகளைச் செய்தாலும் அதை ஏற்றவர்கள், பின்னர் அவர்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. சகல மக்களின் உழைப்பினால்தான் உலகம் வாழ்கின்றது. ஆனால், இன்னமும் ஏழை மக்களுக்கு உதவுபவர்கள் குறைந்தவர்களாகவே இருக்கிறார்கள். மனிதர் ஒருவரில் ஒருவர் சார்ந்து வாழ்வது இயற்கையானது.

தனித்து இயங்க முடியாது. எனவே, சகலரையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உருவாக வேண்டும். எல்லோருக்கும் எல்லாமும் கிட்டாது; இல்லாதவன் பெறுமதி அற்றவன் இல்லை.

வாழ்க்கைச் சுழற்சி சாதாரணமானது. எதனை எவரும் முழுமையாக உணர்கின்றார்களா? அறிந்தும் அறியாதவர்கள் போல, வாழ்கின்றவர்களே அநேகமானவர்களாக இருக்கின்றார்கள். யதார்த்த உண்மையை உணர்க.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்



## கடிதங்கள்

### கிராமங்களுக்கு பஸ் சேவை தேவை

முல்லைத்தீவு- மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய கிராமங்களுக்கு பஸ் சேவை நடத்துமாறு, இக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2010ஆம் ஆண்டுக்குப் பின்னர், இக்கிராமங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்த போதும் இதுவரை பஸ் சேவைகள் நடைபெறவில்லை. 450இற்கும் மேற்பட்ட குடும்பங்கள், இக்கிராமங்களில் வாழ்கின்றன. 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் முல்லைத்தீவு நகரில் இருந்து இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவை நடைபெற்றது. போர்க் காலத்திலும் இக்கிராமத்துக்கான பஸ் சேவைகள் நடைபெற்றன.

2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் இக்கிராமங்களுக்கு பஸ் சேவைகள் நடத்தப்பட வேண்டும் என முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறைபற்று பிரதேச செயலகம் என்பவற்றில் நடைபெற்ற கூட்டங்களில் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் பஸ் சேவைகள் இடம்பெறவில்லை.

பஸ் சேவைகள் இடம்பெறாததன் காரணமாக முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு நகரங்களுக்கு மாலை நேர வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்கள், போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். அம்பலவன்பொக்கணை மகா வித்தியாலயம், மாத்தளன் அ.த.க பாடசாலை, வலைஞர்மடம் அ.த பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கு வருகை தரும் ஆசிரியர்கள், நீண்ட காலமாக நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், மேற்படி கிராமங்களுக்கு பஸ் சேவை நடத்துவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நடராசா கிருஸ்ணகுமார்

ஏழைகளையும் செல்வந்தர்களையும்

# “ஆங்கிலமே தீர்மானிக்கிறது”

ஏழைகளையும் செல்வந்தர்களையும் ஆங்கில மொழியே தீர்மானிக்கிறது. ஆங்கில மொழி புலமை உள்ளவர்கள் உயர்மட்ட தொழில் வாய்ப்புக்களைக் கைப்பற்றிக் கொள்கின்றனர்.

எனவே, இலவச கல்வியில் ஆங்கில மொழி கல்வியை விரிவுபடுத்த புதிய கொள்கைத் திட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (10) இடம் பெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

சர்வதேச தனியார் பாடசாலைகளின் அதிகரிப்பைத் தொடர்ந்து தேசிய பாடசாலைகளில் ஆங்கில மொழி தொடர்பில் தற்போது விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.



ஆங்கில மொழி தெரியாமல் பல்கலைக்கழகங்களில் விஞ்ஞானம், சட்டம், பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் தேர்ச்சிபெறுவது கடினமாகும்.

இலங்கை அரசியலமைப்பில் ஆங்கில மொழி இணைப்பு மொழியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே பாடசாலை கல்வி முறைமையில் ஆங்கில கல்வியை வரையறுக்காமல் விரிவு படுத்த வேண்டும். ஆங்கில மொழி தொடர்பில் ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்பட வேண்டும். சகல தரங்களிலும் இருந்து ஆங்கில மொழியைக் கற்பிக்க புதிய கொள்கைத் திட்டங்களைக் கல்வி அமைச்சு வகுக்க வேண்டும் என்றார்.

# “ஆசிரியர் சேவையில் 7,913 நியமனங்கள் வழங்கப்படும்”

இந்த ஆண்டு ஆசிரியர் சேவையில் 7,913 நியமனங்கள் வழங்கப்படும். ஆசிரியர் - அதிபர் சம்பள முரண்பாடு மற்றும் சேவை நிலையில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். வெகு விரைவில் முரண்பாடற்ற வகையில் ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்படும் என தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (10) நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஆண்டு ஆசிரியர் சேவையில் 7,913 நியமனங்கள் வழங்கப்படும். அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை



தொடர்பில் குறிப்பிடப்பட்டது. இந்த விவகாரம் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே நீதிமன்றத்தின் தீர்மானத்துக்கு அமைவாகவே செயல்பட முடியும்.

அதிபர் சேவையில் 1,610 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. கடந்த ஜனவரி மாதம் நிர்வாக மட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்குக் கல்வி அமைச்சு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அதேபோல் கல்வி நிர்வாக சேவையில் 1331 வெற்றிடங்கள் காணப்படுகின்ற நிலையில் 422 பேருக்கு நியமனங்களை வழங்குவதற்கு அரச சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி கோரப்பட்டுள்ளது. நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த பதவிக்கான பரீட்சை நடைபெற்றது. இருப்பினும், நியமனங்கள் வழங்கப்படவில்லை.

ஆசிரியர் கல்விச் சேவையில் 1,310 வெற்றிடங்கள் காணப்படுகின்ற நிலையில் முதல் கட்டமாக 706 பேருக்கு நியமனங்களை வழங்குவதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. கடந்த காலங்களில் இழுபறி நிலையிலிருந்த விடயங்களை நாங்கள் துரிதப்படுத்தியுள்ளோம் என்றார்.

# “தம்பலகாமத்துக்கு தனி கல்வி வலயம் வேண்டும்”

தம்பலகாமத்தில் மூன்று இனங்களுக்கும் வேறு படுத்தப்பட்ட வகையில் மூன்று கல்வி வலயங்கள் காணப்படுவது இனவாத செயற்பாடாகப் பார்க்கப்படுகிறது. எனவே, தம்பலகாமத்துக்கு தனியான கல்வி வலயத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட எம்.பி. இம்ரான் மஹரூப் கல்வி அமைச்சிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (10) இடம் பெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்தினார்.

இலவச கல்வி அனைவருக்கும் நியாயமானதாகக் கிடைக்கின்றதா என்பது பிரச்சனைக்குரியதாக உள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா, மூதூர், திருகோணமலை,



திருகோணமலை வடக்கு மற்றும் கந்தளாய் ஆகிய கல்வி வலயங்கள் காணப்படுகின்றன. தம்பலகாமம் பகுதியில் உள்ள பாடசாலைகள் இன ரீதியான பிரிவினை நிலை அடைந்துள்ளன. தம்பலகாமம் பகுதியில் உள்ள தமிழ் பாடசாலைகள் திருகோணமலை வலயத்திலும், முஸ்லிம் பாடசாலைகள் மூதூர் வலயத்திலும், சிங்கள பாடசாலைகள் கந்தளாய் வலயத்திலும் இணைக்கப்பட்டுள்ளன. அருகருகில் உள்ள பாடசாலைகள் இன ரீதியில் பிரிக்கப்பட்டுள்ள நிலையில் மாணவர்களின் மத்தியில் எவ்வாறு இன நல்லிணக்கம் பற்றிப் பேசுவது என்ற அச்சம் காணப்படுகிறது.

இதன் காரணமாக தம்பலகாமத்துக்கு தனியான கல்வி வலயத்தைக் கொண்டு வரும் முயற்சிகளை மேற்கொண்டு இருந்தோம்.

திருகோணமலை பகுதியில் குச்சவெளி தனியான வலயமாக உருவாக்கப்பட வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தினோம். அந்த பகுதியின் எல்லை நிர்ணயங்களுக்கு அமைவாக 2023.09.26ஆம் திகதி கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் குச்சவெளிகான தனியான கல்வி வலயத்தை அமைப்பதற்காக யோசனைகளை முன்வைத்துள்ளதாகக் கிழக்கு மாகாண செயலாளர் எமக்கு அறிவுறுத்தியுள்ளார் என்றார்.

# “தமிழ், முஸ்லிம் இடையே பிளவை ஏற்படுத்தாதீர்”

பாராளுமன்றத்தில் தனக்கு இருக்கும் உரிமையைப் பயன்படுத்தி முஸ்லிம் சமூகத்திற்கு எதிராகவும் மார்க்கத்திற்கு எதிராகவும் பேசுபவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (10) உரையாற்றுகையிலேயே இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் தொடர்பாக அவ்வப்போது பேசப்பட்டுவருகின்றன. அதில்



திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றால் அதுதொடர்பில் முஸ்லிம் கலாசார திணைக்களம், ஜம்மியதுல் உலமா, நீதி அமைச்சு முஸ்லிம் எம்.பிக்கள், அரசாங்க தரப்பினருடன் அதனைக் கலந்துரையாடி மேற்கொள்ள முடியும். அவ்வாறு இல்லாமல் முஸ்லிம் சமூகத்தைத் தூண்டும் வகையில் அது தொடர்பில் கருத்து தெரிவிப்பதற்கு இடமளிக்கக்கூடாது. இது தமிழ், முஸ்லிம் மக்களிடையே பிளவை ஏற்படுத்தக்கூடும்.

அதைவிடுத்து, பாராளுமன்றில் முஸ்லிம்களின் மனதைப் புண்படுத்தும் வகையில் பேசி விட்டு, அது சார்பில் அவர்கள் விளக்கங்கள் கேட்கையில், மிகவும் மோசமாகவும் கேவலமாகவும் அறிக்கைகளை வெளியிடுவது தமிழ் மக்கள் இடத்திலும் முஸ்லிம் மக்கள் இடத்தில் பாரிய பிரச்சனைகளை ஏற்படுத்தும் என்றும் தெரிவித்தார்.

# “கல்வியில் மறுமலர்ச்சி யுகமொன்று உருவாகும்”

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக் காலத்தில் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்படும் யுகமொன்று உருவாகும் என்று யாழ். மாவட்ட ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (10) நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.



எமது நாட்டில் கல்வியானது சிறந்தவொரு ஆயுதமாக மக்களால் பார்க்கப்படுகின்றது. கடந்த காலங்களில் நாட்டில் யுத்தம் நடந்த போதும் மக்கள் கல்வியைக் கைவிடவில்லை. இந்த கல்வித்துறையில் பெரும் மறு மலர்ச்சியை உருவாக்க வேண்டும். இதற்காகவே இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்கம் கல்விக்காக 271 பில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கியுள்ளது. அதன்படி தேசிய மக்கள் சக்தி ஆட்சிக் காலத்தில் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்படும் யுகமொன்று உருவாகும். மக்கள் எதிர்பார்க்கும் நன்மைகள் இதில் கிடைக்கும் என்றார்.

இதேவேளை முன்பள்ளி ஆசிரியர்கள் குறைந்த சம்பளத்துடன் கற்பிக்கின்றனர். அவர்களின் சம்பளத்தை அதிகரிக்க 100 மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. அதேபோன்று பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். அதன்படி கல்வித்துறையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன் எமது அரசாங்கம் 2025ஆம் ஆண்டிலிருந்து ஆட்சேர்ப்புகளை செய்யவுள்ளது. இதன்படி கல்வி நிருவாக சேவை தரம் மூன்றுக்கு 555 பேரும், டிப்ளோமா பட்டதாரிகள் 4,140 பேரையும், 2,500 ஆங்கில ஆசிரியர்களையும், தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு 25 ஆயிரம் ஆசிரியர்களையும், 100 ஆசிரியர் ஆலோசகர்களும், பெருந்தோட்ட பாடசாலைகளுக்கு 2,935 ஆசிரியர் உதவியாளர்களும் உள்ள வாங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதன்மூலம் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்படும் என்றார்.

“வேலையில்லா பட்டதாரிகளுக்கு

# நியாயத்தை பெற்றுக் கொடுங்கள்”

வேலையில்லாப் பிரச்சினைக்கும், கல்வி முறைக்கும் இடையே நிலவும் பொருத்தமற்ற சுழற்சி இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே அமைந்து காணப்படுகின்றன. அரசியலில் கைக்கூலிகளாக மட்டுமே இருக்கும் வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினை மீண்டும் பிரதான பேசு பொருளாக மாறியுள்ள பின்னணியில், நான் பின்வரும் கேள்விகளைக் கேட்கிறேன். சரியான பதில்களையும் விளக்கங்களையும் அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (11) நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்வியெழுப்பினார்.

இலவசக் கல்வியின் கீழ் ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர் நிலை என ஒவ்வொரு நிலைக்கும், ஒரு மாணவருக்கு அரசாங்கம் ஆண்டுக்கு எவ்வளவு தொகையை செலவழிக்கிறது? இது தொடர்பாக அரசாங்கம் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வதையும் மேற்கொண்டுள்ளதா?

உயர் தரத்தில் கலை, வணிகம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் பயிலும் மாணவர்கள், தங்கள் பட்டப்படிப்பு முடிவடையும் திகதியிலிருந்து வேலை கிட்டும் வரை எடுக்கும் காலம் தொடர்பில் அரசாங்கம் முன்னெடுத்த ஏதேனும் ஆய்வுகள் உண்டா? அவ்வாறானால், எடுக்கும் காலத்தை தனித்தனியாக குறிப்பிடவும்?

மேலும், இதுவரை 580 சுதேச மருத்துவ பட்டதாரிகள் தங்கள் பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளனர். இவர்களுக்கு தொழிற்ப் பயிற்சி (Internship) வழங்க அரசாங்கம் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. இவர்களுக்குரிய தொழிற்ப் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேலையற்ற பட்டதாரிகள் எத்தனை பேர் உள்ளனர்? இந்த பட்டதாரிகளில் வெளிவாரி, உள்வாரி, திறந்த மற்றும் தனியார் பல்கலைக்கழக பட்டதாரிகள் எத்தனை பேர் உள்ளனர்?



பட்டதாரிகளின் எண்ணிக்கையை அவர்கள் பெற்ற பட்டப்படிப்புக்கு ஏற்ப தனித்தனியாக முன்வைக்க முடியுமா? தொழில் சந்தையில் நுழைய முடியாமல் எந்த அடிப்படையில் அவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்? இது குறித்து அரசாங்கம் மேற்கொண்ட ஆய்வுகள் என்ன? அவற்றை சபையில் முன்வைப்பீரா?

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 72ஆவது பக்கத்தில் வேலையில்லா பட்டதாரிகள் 35,000 பேருக்கு முறையான ஒழுங்கின் கீழ் துரிதமாக வேலை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், எத்தனை பட்டதாரிகளை இந்த ஆண்டு சேர்த்துக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது? இவை எந்தெந்த துறைகளுக்கு? இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் இதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது? வேலை தேவைப்பாட்டின் அடிப்படையில், அரசாங்கம் அவர்களை ஏதாவது தகுதி அடிப்படையிலா இணைத்துக் கொள்ள எதிர்பார்க்கிறது? இல்லையென்றால், ஏதேனும் போட்டிப் பரீட்சை மூலமாகவா?

கலைப் பட்டதாரிகளில் பெரும்பாலானோர் பட்டப்படிப்புக்குப் பிறகு வேலை தேடும் நெருக்கடியில் இருந்து வருவதால், இந்த நிலையை முடிவுக்கு கொண்டு வர இதுவரையில் அரசாங்கம் முன்வைத்துள்ள கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகள் யாவை?

தற்போதைய அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி, இந்த பட்டதாரிகளுக்கு 45 வயது வரம்பைப் பொருட்படுத்தாமல் போட்டிப் பரீட்சைகளில் தோற்றுவதற்கு அனுமதியளிக்க வேண்டும். இந்த வேலையில்லாப் பட்டதாரிகளை தொடர்பு கொண்டு, அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சபையில் கோரிக்கை விடுத்தார்.





மாத்தளை ஸ்ரீமுத்து மாரியம்மனின்

# மாசிமக பஞ்ச இரதபவனி

மாத்தளை ஸ்ரீமுத்து மாரியம்மனின் மாசிமக பஞ்ச இரதபவனி, புதன்கிழமை (12) காலை 06 மணிமுதல் 13ஆம் திகதி வியாழக்கிழமை காலை 06 மணிவரையிலும் மாத்தளையில் வீதி உலா வரவிருக்கிறது. இந்நிலையில்,

‘உலகத்துநாயகியே எங்கள் முத்துமாரியம்மா
உன்பாதம் சரண்புகுந்தேன் எங்கள் முத்துமாரியம்மா’

என்று மாத்தளை ஸ்ரீ முத்து மாரியம்மையின் பெருமையைப்பாட்டில் இசைக்கிறார், மகாகவி பாரதியார்.

காசி என்றதும் விசாலாட்சியும், காஞ்சி என்றதும் காமாட்சியும், மதுரை என்றதும் மீனாட்சியும் நினைவில் எழுவதுபோல் மாத்தளை என்றதும் முத்துமாரியம்மை தான் நினைவில் வருகிறார்.

அருளாட்சி நடத்தும் அன்னையாக நர்த்தன சுந்தரியாக, சிறுமைகண்டு பொங்கும் தேவியாக, மகிஷ் சுரமர்த்தனியாக, கொடுமையைக்கருவறுக்கும் காளியாக, பசிப்பிணிபோக்கும் அன்னபூரணியாக, அரனுடன் கலந்த அர்த்தநாரியாகத்திருக்கோலம் காட்டும் அன்னை முத்துமாரியாக மாத்தளையிலே குடிகொண்டமை நாம் பெற்றபேறு என்றே கூறவேண்டும்.

இன்று சக்தியின் பிரதான வழிபாட்டு மூர்த்தமாக விளங்குவது மாரியம்மன் திருக்கோலமாகும்.

மத்திய மலைநாட்டில் ஆங்கிலேயர் காலத்தில் பெருந்தோட்டபயிர்ச் செய்கைக்காக அழைத்து வரப்பட்ட மக்களின் வருகையோடு மாரியம்மன் வழிபாடு, கிராமிய தெய்வ வழிப்பாட்டு முறையில் தொடர்ந்து இன்று சிவாகம நெறியில் தழைத் தோங்கியுள்ளது. மாரியம்மன் வழிபாட்டுடன் வளர்ச்சி பெற்று வருவது மலையகத்தில் மாரியம்மன் கலாசாரமாகும்.

இலங்கையில் சைவம் வளர்த்த, சான்றோர்களும், தமிழ் வளர்த்த செம்மல்களும் ஈஸ்வரனை மறவாது நூல்கள் எழுதியுள்ளனர். சிவனை மறந்து செய்யும் தர்மங்கள் வீண் செயல்கள் என்பதை நமது முன்னோர்கள் உறுதியாக நம்பினர். அந்தப்பாரம் பரியம் என்பது அழியாது வேரோடி வந்துள்ளது. அண்மையில் எங்கள் மத்தியில் ஒளி விளக்காகத் திகழ்ந்த வணக்கத்துக்குரிய யோகர்சுவாமிகளும் ‘ஈழம் சிவப்பொழிவு பெற்றநாடென பதிவு செய்துள்ளார்.

ஈழத்தில் நாவலர் பெருமான் ஆற்றிய சைவத் திருப்பணிகளை, அண்மையில் நான்காசிக்கு விஜயம் செய்தபோது, அங்கு வாழும் சைவபிரகாச வித்தியாசாலை மாணவ பரம்பரையினர் இளைய தலைமுறையினர் எடுத்தியம்பியபோது, புளங்காகிதம் அடைந்தேன்.

மலையக மக்களின் முதல் வரலாற்று சாசனம் மாத்தளை ஆகும். மாத்தளை ஸ்ரீ அன்னை முத்துமாரி மலையக மக்களின் இதய தெய்வம். மாத்தளை என்றால் மாசிமகம். அன்னை முத்துமாரி திருக்கோயில் பஞ்ச இரத பவனி என்பனவையாகும்.



மாத்தளையில் மாசிமக மகோற்சவமும் பஞ்ச இரதபவனியும் வெகு பக்தி பிரவாகமாக பல்லாண்டு காலமாக விமரிசையாக நடைபெற்று வருவது அம்மாளின் அனுக்கிரகமேயாகும்.

மாசிமகமும் பஞ்ச இரத பவனியும் சிறப்பாக நடைபெற அயராது உழைக்கும் ஆலய பரிபாலன சபையினர் உட்பட அனைத்து தொண்டர்களுக்கும் அடியார்களுக்கும் அம்பாளின் அருளாசி பெற வேண்டித் துதிக்கின்றோம்.

உலகெங்கும் அம்மனின் புகழ் ஓங்குக!

அனைவருக்கும் அம்பாளின் அருளாசி கிட்டுவதாக.

















# கர்நாடக இசை அரங்கேற்றம்

சாயி ஸ்ருதி லயா கலைக் கூடத்தின் இயக்குநர் வைத்திய கலாநிதி சாய் லக்ஷ்மி லோகீஸ்வரனின் மாணவியும் கந்தகுமாரின் புதல்வியுமான கரிஷ்மா கந்தகுமாரின் கர்நாடக இசை அரங்கேற்றம் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில், பெப்ரவரி 22ஆம் திகதியன்று நடைபெற்றது.




















அமெரிக்கா

எக்ஸ் தளம் மீதான சைபர்

# தாக்குதலின் பின்னணியில் உக்கரைன்?

எக்ஸ் தளம் மீதான சைபர் தாக்குதலின் பின்னணியில் உக்ரைன் உள்ளதாக, எலான் மஸ்க் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எலான் மஸ்க்கிற்கு சொந்தமான எக்ஸ் சமூக வலைதளம் (டுவிட்டர்), திங்கட்கிழமை (10) உலக அளவில் முடங்கியது. திங்கட்கிழமை (10) பிற்பகல் 3 மணியளவில் எக்ஸ் தளம் முடங்கியதால் பயனாளர்கள் அவதியடைந்தனர்.

சுமார் 1 மணிநேர முடக்கத்திற்குப்பின் 4 மணியளவில் எக்ஸ் தளம் மீண்டும் செயற்பாட்டிற்கு வந்தது.



இது சைபர் தாக்குதல் என்பது தெரியவந்துள்ளது.

இந்நிலையில், எக்ஸ் தளம் மீதான சைபர் தாக்குதலின் பின்னணியில் உக்ரைன் உள்ளதாக எலான் மஸ்க் குற்றஞ்சாட்டியுள்ளார். ரஷ்யாவுடனான போரில் உக்ரைனுக்கு வழங்கிவந்த இராணுவ உதவிகளை அமெரிக்கா நிறுத்தியுள்ளது. இந்த விவகாரத்தில் உக்ரைன், அமெரிக்கா இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அரசியில் முக்கிய பொறுப்பில் எலான் மஸ்க் உள்ளார். தற்போது எலான் மஸ்கின் எக்ஸ் தளம் முடக்கப்பட்ட நிலையில் இதற்கு உக்ரைன் தான் காரணம் என அவர் குற்றஞ்சாட்டியுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா

பூமிக்கு திரும்பும் சுனிதா வில்லியம்ஸ்:

## திகதியை அறிவித்த நாசா

சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோர், மார்ச் 16ஆம் திகதி பூமிக்கு அழைத்து வரப்படுவார்கள் என்று நாசா அறிவித்துள்ளது.

விண்வெளிக்குச் சென்று தங்கி ஆய்வு செய்ய இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனையான சுனிதாவில்லியம், புட்ச் வில்மோர் கடந்த ஜூன் 5, 2024 அன்று போயிங்கின் ஸ்டார்லைனரில் 10 நாள் பயணமாக சென்றனர்.

ஆனால், இருவரும் ஒன்பது மாதங்களாக விண்வெளி நிலையத்திலிருந்து திரும்ப இயலாமல் தவித்து வருகின்றனர்.

போயிங் நிறுவனத்தின் ஸ்டார்லைனர் ரொக்கெட்டில் இவர் சென்றார்.



இவருடன் அமெரிக்க விண்வெளி வீரரான புட்ச் வில்மோரும் பயணித்தார். இருவரும் 10 நாட்களில் பூமிக்குத் திரும்புவதுதான் திட்டம்.

ஆனால், திட்டத்தின்படி எதுவும் நடக்கவில்லை.

உக்ரைன்

அமெரிக்காவுடன் மீண்டும்

## பேச்சுவார்த்தைக்கு தயாராகும் உக்ரைன்

சவூதி அரேபியாவில், இந்த வாரம், அமெரிக்காவுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக, உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி கூறியுள்ளார்.

இதன்போது, கனிமவள ஒப்பந்தம் தொடர்பாகவும், ரஷ்யாவுடனான போரை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாகவும், அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாக, உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி அறிவித்துள்ளார்.



இந்த வாரம் சவூதி அரேபியாவில், பேச்சுவார்த்தை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதுடெல்லி

பாராளுமன்ற வளாகத்தில்

## தி.மு.க. எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம்

பாராளுமன்ற வளாகத்தில், தி.மு.க. கூட்டணி எம்.பிக்கள், செவ்வாய்க்கிழமை(11) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழக மாணவர்களின் கல்வி சார்ந்த பல்வேறு திட்டக்கூறுகளை நிறைவேற்றுவதற்காக ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 2024-2025ஆம் ஆண்டுக்கான நிதி ரூ.2,152 கோடியும் மத்திய அரசு விடுவிக்காமல் காலம் தாழ்த்தி வருகிறது.

புதிய கல்விக் கொள்கையைத் தமிழ்நாடு அரசு ஏற்காவிட்டால் கல்வி நிதி கிடையாது என்று மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார். அவரின் கருத்துக்குத் தமிழக அரசியல் கட்சிகள் எதிர்ப்பு



தெரிவித்து வருகின்றன.

இதனிடையே, புதிய கல்விக்கொள்கை, கல்வி நிதி தொடர்பாக, திங்கட்கிழமை (10), மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கும் தி.மு.க. எம்.பிக்களுக்கும் இடையே பாராளுமன்றத்தில் கடும் வார்த்தை மோதல் ஏற்பட்டது.

குறிப்பாக தி.மு.க. எம்.பிக்களை நாகரீகமற்றவர்கள் என மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. அவரது பேச்சைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் தி.மு.க. கூட்டணி எம்.பி.க்கள் பாராளுமன்றத்தில் அமளியில் ஈடுபட்டனர். அதன்பின்னர், பாராளுமன்றம் சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், புதிய கல்விக்கொள்கை விவகாரம், மும்மொழிக்கொள்கை, மத்திய மந்திரி தர்மேந்திர பிரதானின் பேச்சிக்கு கண்டனம் தெரிவித்து தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சி எம்.பிக்கள் பாராளுமன்ற வளாகத்தில் செவ்வாய்க்கிழமை(11) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கருப்பு உடை அணிந்து, பதாகைகளை ஏந்தி தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சி எம்.பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மியன்மார்/இந்தியா

சைபர் குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்ட

## 283 இந்தியர்கள் மியன்மாரில் மீட்பு

வேலை வாங்கி தருவதாகக் கூறி மியன்மாருக்கு அழைத்துச் செல்லப்பட்டு சைபர் குற்றங்களில் ஈடுபடுத்தப்பட்ட 283 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

மியன்மார் - தாய்லாந்து எல்லைப் பகுதியில் சட்டவிரோதமாக இயங்கி வந்த call சென்டரில் சைபர் குற்றங்களில் ஈடுபட பணியில் அமர்த்தப்பட்ட 283 இந்தியர்களே, இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர். இதையடுத்து, தாய்லாந்து, மியன்மார் போன்ற நாடுகளில் ஐ.டி. நிறுவனத்தில் வேலை என அழைப்புகள் வந்தால் அது தொடர்பாக முழுமையாக விசாரித்துவிட்டுச் செல்ல வேண்டும் என்று, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.




ஆந்திரா

குழந்தைகள் பிறக்கும் போது

## "பெண்ணுக்கு பணம்; ஆண்ணுக்கு மாடு"



ஆந்திராவில் இனி இரண்டு குழந்தைகளுக்குமேல் பெற்றுக்கொள்ளுங்கள் என தெரிவித்த ஆந்திர மாநிலம்,விஜயநகரம் மக்களவை தொகுதி உறுப்பினர் அப்பல நாயுடு, 3ஆவதாக பெண் குழந்தை பிறந்தால் ரூ.50,000 பரிசாக வழங்குவேன் எனவும் கூறியுள்ளார்.

"ஒரு வேளை ஆண் குழந்தை பிறந்தால் ஒரு பசு மாடு பரிசாக வழங்குவேன்" எனவும் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு மக்கள் மத்தியிலும் அவரது சொந்த கட்சியினர் மத்தியிலும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது. பெண் குழந்தைக்கு ரூ.50,000 வழங்கப்படும் என அறிவித்த எம்.பி. ஆண் குழந்தை பிறந்தால் மட்டும் ஏன் பசு மாடு வழங்குவதாக அறிவித்துள்ளார்.

ஆந்திராவில் ஆண் பிள்ளை மாடு மேய்க்கத்தான் உதவுவான் என எம்.பி. முடிவு செய்து விட்டாரோ என எதிர்க்கட்சியினர் கேலி செய்து வருகின்றனர்.

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக்: சங்காவின் சதத்தோடு

# இங்கிலாந்தை வீழ்த்தியது இலங்கை

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் தொடரில், ரய்ப்பூரில் திங்கட்கிழமை (10) நடைபெற்ற இங்கிலாந்து மாஸ்டர்ஸ் அணியுடனான போட்டியில் இலங்கை மாஸ்டர்ஸ் அணி வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இங்கிலாந்து, டில்ருவான் பெரேரா, அசேல குணரட்ண, இசுரு உதான, ஜீவன் மென்டிஸ், சத்துரங்க டி சில்வாவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 146 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில் பில் மஸ்டார்ட் 50 (39) ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு147 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, அணித்தலைவர் குமார் சங்கக்காரவின் ஆட்டமிழக்காத 106 (47) ஓட்டங்களோடு 12.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை




இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக சங்கக்கார தெரிவானார்.







காரைதீவு இ.கி.சங்க பாடசாலையின் விளையாட்டுப் போட்டி:

## சாரதாமணி இல்லம் முதலிடம்

வி.ரி.சகாதேவராஜா

காரைதீவு இ.கி.சங்க பெண்கள் பாடசாலையின் 97ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் வகையில் இடம்பெற்ற வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் சாரதாமணி இல்லம் முதலிடம் பெற்றது.

ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் வெள்ளிக்கிழமையே (07) விளையாட்டுப் போட்டி நடைபெற்றிருந்தது.







பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின்

## ஒப்பந்தத்தை தவிர்த்த மகமதுல்லா

ஒப்பந்தத்தை மார்ச் 2025ஆம் ஆண்டு முதல் தனக்கு வழங்க வேண்டாமென பங்களாதேஷ் கிரிக்கெட் சபையிடம் மகமதுல்லா வினவியதாக சபையின் அதிகாரியொருவர் திங்கட்கிழமை (11) தெரிவித்துள்ளார்.

மகமதுல்லா பி பிரிவில் நீடிக்க தேர்வாளர் சபை முன்மொழிந்திருந்தது.

இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட் சபையின் 2027ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்பதில் ஆர்வம் காட்டவில்லையென சபைக்கு மகமதுல்லா அறிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.


இத்தாலிய சீரி ஏ தொடர்:

## சமநிலையில்லேஸியோ – உடினிஸ் போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (11) அதிகாலை நடைபெற்ற உடினிஸுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் லேஸியோ சமப்படுத்தியது.

லேஸியோ சார்பாகப் பெறப்பட்ட கோலை அலெஸ்ஸியோ றொமக்னொலி பெற்றதோடு, உடினிஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை புளோரியன் தோவன் பெற்றிருந்தார்.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 61 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலன் காணப்படுகின்றது. 60 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நாப்போலியும், 58 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லாண்டாவும், 52 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் ஜுவென்டஸும் காணப்படுகின்றன.



பாகிஸ்தானுக்கெதிரான தொடருக்கான

## நியூசிலாந்துக் குழாமில் றவீந்திர, பிலிப்ஸ் இல்லை



பாகிஸ்தானுக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான நியூசிலாந்துக் குழாமில் டெவோன் கொன்வே, லொக்கி பெர்கியூசன், கிளென் பிலிப்ஸ், றஷின் றவீந்திர, மிற்செல் சான்ட்னெர் ஆகியோர் இடம்பெறவில்லை.

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்) பங்கேற்பதன் காரணமாகவே இவர்கள் குழாமில் இடம்பெறவில்லை.

இதேவேளை நியூசிலாந்து இறுதியாகப் பங்கேற்ற இலங்கைக்கெதிரான தொடரில் வேறு இருபதுக்கு - 20 தொடர்களில் பங்கேற்றதன் காரணமாக அத்தொடரில் பங்கேற்காத டிம் செய்ஃபேர்ட், பின் அலென், ஜேம்ஸ் நீஷம் ஆகியோர் குழாமுக்குத் திரும்பியுள்ளதோடு, இஷ் சோதியும் குழாமுக்குத் திரும்பியுள்ளார்.

இக்குழாமுக்கு மிஷெல் பிறேஸ்வெல் தலைமை தாங்கவுள்ளார்.

குழாம்: மிஷெல் பிறேஸ்வெல் (அணித்தலைவர்), பின் அலென், மார்க் சப்மன், ஜேக்கப் டஃபி, ஸக் போக்ஸ் (4 & 5ஆவது போட்டிகளுக்கு), மிற்ச் ஹே, மற் ஹென்றி (4&5ஆவது போட்டிகளுக்கு), கைல் ஜேமிஸன் (1,2,3ஆவது போட்டிகளுக்கு), டரைல் மிற்செல், ஜிம்மி நீஷம், வில் ஓ ருர்க் (1,2,3ஆவது போட்டிகளுக்கு), டிம் றொபின்ஸன், டிம் செய்ஃபேர்ட், இஷ் சோதி.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 12, மார்ச் 2025, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.